Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 241 | திங்கட்கிழமை 25 ஜூலை 2022 | ஆடி 09 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"தீபாவளிக்குள்ள தீர்வு வருமெண்டு ஐயா சொன்ன தையே சனம் நம்பேக்க, ரணில் சொன்னதையும் இவர் நம்பத்தான் வேணும் பாருங்கோ"

# சொல்வதைச் செய்வார்கள் என்று ரணில், தினேஷை எப்படி நம்புவது?

## கேள்வி எழுப்புகிறார் சம்பந்தன்



**யாழ்ப்பாணம், ஜூலை 25**

**ராஜபக்சக்களோ அவர்களது அணியினரோ எந்தவொரு காலத்திலும் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியவர்கள் அல்லர். இவ்வாறானதொரு நிலையில் அவர்களின் தயவுடன் ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் கூறுவதை எந்த அடிப்படையில் நம்பலாம்? என்று கேள்வி எழுப்பியுள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.**

11 ➤

# ஓகஸ்ட் 9 ஆம் திகதி ரணில் விரட்டப்படுவார்

## எச்சரிக்கிறார் அநுர



கொழும்பு, ஜூலை 25

ராஜபக்சக்கள் மக்களால் எப்படி விரட்டப்பட்டார்களோ அதேபோன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஓகஸ்ட் 9ஆம் திகதி விரட்டியடிக்கப்படுவார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரி

12 ➤

# மக்கள் எழுச்சியின் முன் ஆயுதபலம் வெறும் தூசு!

## முன்னாள் தளபதி சரத்பொன்சேகா கருத்து

கொழும்பு, ஜூலை 25

மக்கள் எழுச்சியின் அந்தப் பலத்தின் முன்பாக எந்தவொரு ஆயுதபலமும் தோற்றுப்போகும். இதனால்தான் ராஜபக்சக்கள் தப்பியோட நேர்ந்தது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணர்ந்து

11 ➤

# ரணிலின் பட்ஜெட் அடுத்த மாதம்!

## நடவடிக்கைகளை ஆரம்பித்தது நிதியமைச்சு

கொழும்பு, ஜூலை 25

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் 2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் நிதியமைச்சால்

12 ➤

# இரு நாள்களேயான சிசு வீதியோரத்தில் மீட்பு!

## முழங்காவிலில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூலை 25

பிறந்து இரண்டு நாள்களேயான சிசு ஒன்று, கைவிடப்பட்டிருந்த நிலையில், அக்கராயன்.

12 ➤

# வீட்டுக்குள் திடீரென துப்பாக்கி ரவைகள்

## அச்சத்தில் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜூலை 25

இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள காணியை விடுவிக்குமாறுகோரிவருபவரின் வீட்டுக்குள் நேற்றுக் காலை, புதிய துப்பாக்கி ரவைகள் காணப்பட்

09 ➤

பாடசாலைகள் ஆரம்பமாகும் நிலையில்

# பேருந்துச் சேவைகள் முழுமையாக முடக்கம்

யாழ்., ஜூலை 25

யாழ். மாவட்டத்தில் தனியார் பேருந்துகள் மற்றும் இ.போ.ச. யாழ். சாலை பேருந்துகள் என்பன இன்று சேவையில் ஈடுபடாது என அறிவித்துள்ளன. இன்றைய தினம் பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த அறிவிப்பால் பாடசாலை

09 ➤

போர்க்குற்றங்களுக்காக

# கோத்தாபயவை கைது செய்யுங்கள்

## சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் 63 பக்க ஆவணம் கையளிப்பு

ஜெகன்னஸ்பேர்க், ஜூலை 25

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை, போர்க்குற்றங்களில் ஈடுபட்டமைக்காக உடனடியாகக் கைது செய்யக்கோரி, சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டத்தைச் சேர்ந்த சட்டவாளர்கள் குற்றவியல் முறைப்பாட்டைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள். பாதுகாப்புச் செயலராகப் பதவி வகித்த காலப்பகுதியில்,

09 ➤

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரலாறு காணாத உணவு நெருக்கடி :

# 3.4 மில்.இலங்கையர்களுக்கு உணவூட்டுகிறது சர்வதேசம்!

### அடுத்தடுத்த மாதங்கள் குறித்து ஆழ்கவலை

**கொழும்பு, ஜூலை 25**

**இலங்கை மிகமோசமான உணவுப்பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள நிலையில், 3.4 மில்லியன் மக்களுக்கு உலக உணவுத் திட்டம் உதவி வழங்கவுள்ளது. அத்துடன் 1.4 மில்லியன் மக்களுக்கு நிபந்தனையற்ற வகையில் உதவிகளைச் செய்வதற்கும் உலக உணவுத்திட்டம் தயாராகவுள்ளது என்று உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் அப்துர் ரஹீம் சித்திக் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அண்மைக்காலமாக மிக மோசமான உணவுப் பற்றாக் குறையை எதிர்நோக்கி வருகின்றது. நாளுக்குநாள் மோசமான கட்டத்தை நோக்கி இலங்கை நகர்ந்து செல்கின்றது.

பணவீக்கத்துடன் உணவுக்கான தேடல்களும் இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

இந்த நிலைமை அடுத்த சில மாதங்களில் இன்னும் ஆபத்தானதாக மாறலாம்.

உணவுப்பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக பல குடும்பங்கள் உணவு உட்கொள்ளும் வேளைகளையும் அளவையும் குறைத்துள்ளன.

அத்துடன் பெரும்பாலான குடும்பங்கள் இளையவர்களுக்கு மாத்திரம் உணவை வழங்குவதில் முன்னுரிமையைக் கொடுத்துள்ளனர். இந்த நிலையிலேயே உலக உணவுத்திட்டம் பல குடும்பங்களுக்கு உதவ முன்வந்துள்ளது - என்றார். (ம-14,இ)

## அரசுக்கு எதிரான கூட்டணி; கலந்துரையாடல் ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 25

அரசாங்கத்துக்கு எதிரான பரந்துபட்ட கூட்டணியொன்றை உருவாக்குவது தொடர்பிலான கலந்துரையாடல்கள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன. இதன் ஒரு கட்டமாக நேற்றுமுன்தினம் மாலை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

அதில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு சஜித் பிரேமதாஸவுடன் நீண்ட கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டிருந்தனர். பின்னர் அந்தத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் சிலர் சுதந்திரக் கட்சி தலைமையத்துக்குச் சென்று அங்கும் கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டனர்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகக் கலந்துரையாடல் அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றுள்ளது. (எ-இ)



## இலங்கைக்கு பிரிட்டன் என்றும் துணைநிற்கும்

கொழும்பு, ஜூலை 25

இலங்கைக்கு பிரிட்டன் தொடர்ந்தும் பல்வேறு துறைகளில் ஆதரவு வழங்கித் துணை நிற்கும் என்று பிரிட்டன் அமைச்சர் தரிக் அஹமட், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை மற்றும் பொருளாதார நிலைமை குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதாக அமைச்சர் தனது ருவிற்றர் கணக்கில் குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான போராட்டங்கள், ஊடக சுதந்திரம், மனித உரிமைகள் மற்றும் நீதி தொடர்பான உரிமைகள் குறித்து கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது. தற்போதுள்ள சவால்களுக்கு மத்தியில் இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்க பிரிட்டன் தயாராகவுள்ளது என்றும் பிரிட்டன் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)



## தேயிலை செய்கைக்கு 15,000 தொன் யூரியா!

*விவசாய அமைச்சில் தீர்மானம்*

கொழும்பு, ஜூலை 25

நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பயிர்ச்செய்கையான தேயிலை செய்கைக்குத் தேவையான 15 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாட்டுக்குக் கிடைத்த 44 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தில் 60 வீதமான உரம் தேயிலைச் செய்கைக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- மரக்கறி செய்கைக்குத் தேவையான கலப்பு உரத்தை விரைவில் தயாரித்து எதிர்வரும் இரு வாரங்களுள் சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விவசாய அமைச்சர் இதன்போது கோரிக்கை விடுத்தார். (ச-இ)

## நாட்டில் நிலவும் நெருக்கடியை ரணிலால் சமாளிக்க முடியுமாம்

### அத்துரலிய ரத்ன தேரர் சவால்

கொழும்பு, ஜூலை 25

நாட்டில் நிலவும் நெருக்கடியை உடனடியாக சமாளிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேய இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடு உணவு நெருக்கடியை எதிர்கொள்வதைத் தடுக்க முடியும். எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகளை மூன்று மாதங்களுக்குள் நீக்கமுடியும். சில தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அதற்கமைய தற்போது நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க அவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டியது அவசியம். போர்த்துக்கேயர் மற்றும் ஆங்கிலேயரின் அரசியல் கொள்கையைப் பின்பற்றிய கடைசி அரசியல்வாதி ஜனாதிபதி விக்கிரமசிங்க. எனவே அவருக்குப் பின்னர் ஒரு புதிய சகாப்தம் தொடங்கும்- என்றார். (ம-14-இ)

## அபேவர்தனவுக்கு அமைச்சுப் பதவி!



கொழும்பு, ஜூலை 25

வெற்றிடமாகி இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தனவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் வெற்றிடமாக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வஜிர அபேவர்தன பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இதன்படி எதிர்வரும் 27ஆம் திகதி வஜிர அபேவர்தன நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றதன் பின்னர் அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## குரங்கு அம்மை நோயால் சர்வதேச அவசர நிலை!

கொழும்பு, ஜூலை 25

ஆபிரிக்கப் பிராந்தியத்தில் முதல் முறையாகக் கண்டறியப்பட்ட குரங்கு அம்மை, தற்போது பல்வேறு நாடுகளில் பரவியுள்ளது. குரங்கு அம்மை நோயால் உலகம் முழுவதும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இதுவரை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இதுதொடர்பில் சர்வதேச அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

World Health Organization

உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் அதானம் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

"இதுவரை 75 நாடுகளைச் சேர்ந்த 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் குரங்குஅம்மை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 5 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். இதற்கு முன் இல்லாத அளவு பல்வேறு நாடுகளில் குரங்கு அம்மை நோய் பரவி வருகிறது. ஆய்வாளர்களின் கருத்துக்களின்படி குரங்கு அம்மை நோயை சர்வதேச அவசர நிலையாக அறிவிக்கிறோம்" - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரிலிருந்து சவூதி செல்கின்றார் கோத்தா?

## இலங்கை திரும்புவதை விரும்பவில்லையாம்



**கொழும்பு, ஜூலை 25**

**இலங்கையில் ஏற்பட்ட மக்கள் புரட்சியால், பதவியில் இருந்து விலகி நாட்டைவிட்டுத் தப்பியோடிய கோத்தாபய ராஜபக்ச தற்போது சிங்கப்பூரில் வசித்துவரும் நிலையில், அவர் சிங்கப்பூரில் இருந்து சவூதிக்குச் சென்று அங்கு சில காலம் தங்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

ஜூலை மாதம் 9ஆம் திகதி கோத்தாபயவைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி மக்கள் புரட்சி பூதாகரமானதை அடுத்து, மாலைதீவுக்கு அவர் தப்பிச்சென்றார். பின்னர் அங்கிருந்து சிங்கப்பூருக்குச் சென்று அங்கிருந்தபடியே தனது பதவி விலகலை அறிவித்தார். சிங்கப்பூரில் கோத்தாபயவைப் பாதுகாப்பதற்கு அந்தநாட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதனால் அவர் விரைவில் சிங்கப்பூரில் இருந்து வெளியேறவுள்ளார். சிங்கப்பூரில் இருந்து கடும் பாதுகாப்புக்கு மத்தியில் அவர் இலங்கைக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், தற்போதைய நிலையில் இலங்கைக்குத் திரும்புவதை கோத்தாபய விரும்பவில்லை.

ஆதலால், சவூதிக்குச் சென்று அங்கு சிலகாலம் தங்கியிருக்க கோத்தாபய திட்டமிட்டுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

# மைத்திரியின் இல்லம் ரணிலின் பாவனைக்கு

கொழும்பு, ஜூலை 25

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தங்கியிருந்த கொழும்பு பேஜெட் வீதியிலுள்ள மாளிகையை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாவனைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்துக்குப் போராட்டக்காரர்கள் தீ வைத்ததை அடுத்து அவர் தற்போது பாதுகாப்பான இடத்தில் தங்கியுள்ளார். ஆர்ப்பாட்டக்காரர்களால் ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை என்பன ஆக்கிரமிக்கப்பட்டமை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதால் ஜனாதிபதியோ, பிரதமரோ அங்கு வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வசித்து வந்த வீட்டை ஜனாதிபதிக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர், நீதிமன்ற உத்தரவின் பேரில் மைத்திரி அந்த வீட்டில் இருந்து வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# கண்ணீர்ப் புகைக்குண்டுகள் கொள்வனவை வெளியிடுக

## தகவல் அறியும் உரிமை ஆணையம் உத்தரவு

கொழும்பு, ஜூலை 25

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மே 24ஆம் திகதி வரை கண்ணீர்ப் புகைக்குண்டுகள் கொள்முதல் தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு பொலிஸாருக்கு தகவல் அறியும் உரிமை ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட காலத்துக்குள் இலங்கைக்கு எவ்வளவு கண்ணீர்ப்புகை குண்டுகள் இறக்குமதி செய்யப்பட்டன மற்றும் எத்தனை தடவைகள் எவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டன, ஒவ்வொரு கொள்முதலுக்குமான செலவு, கொள்முதல் தொடர்பான ஒப்புதல்கள் மற்றும் ஒவ்வொரு கொள்முதலுக்குமான தொழில்நுட்பக் குழு மதிப்பீடுகள் மற்றும் விலைக்கோரல் ஆவணங்களின் நகல்கள் என்பனவே இவ்வாறு கோரப்பட்டுள்ளன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சமூகம் மற்றும் மதத்துக்கான மையம் மே மாதம் தாக்கல் செய்த கோரிக்கையை பொலிஸ் திணைக்களம் நிராகரித்திருந்தது. தேசிய பாதுகாப்புத் தொடர்பான தகவல்களின் இரகசியம் பேணப்படவேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் தகவல்களை வழங்கமுடியாது என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்தது. எனினும், பொலிஸ் திணைக்களத்தின் நியாயப்பாட்டை மறுத்துள்ள தகவல் அறியும் உரிமை ஆணையம் கூடிய விரைவாக இந்தத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்று தெரிவித்துள்ளது. (ம)




# இலங்கைக்கு உதவ வேண்டாம் ஜப்பானை கோரினாராம் ரணில்!

## 2007ஆம் ஆண்டின் சம்பவத்தை அம்பலப்படுத்தியது விக்கிலீக்ஸ்

கொழும்பு, ஜூலை 25

இலங்கைக்கு உதவவேண்டாம் என 2007ஆம் ஆண்டு ஜப்பான் அரசாங்கத்திடம் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராகப் பதவிவகித்த ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்தார் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மையில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் வெளியிட்ட ருவிற்றர் பதிவிலேயே விக்கிலீக்ஸ் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்குவதை நிறுத்துமாறு ரணில் கோரினார் என்றும், அதனை ஜப்பானிய அரசாங்கம் நிராகரித்தது எனறும் விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

நாட்டின் தலைவர்கள் தரகு பெற்றுக்கொள்வதனாலும், மக்களை உதாசீனம் செய்வதனாலும் அந்த நாட்டு மக்கள் பாதிக்கப்படக் கூடாது எனவும் உதவி வழங்குவதை நிறுத்த முடியாது எனவும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுக்கு ஜப்பான் பதிலளித்தது என்றும் விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது. (ம)

# ரணிலின் வெற்றியை கொண்டாடிய நாமல்

கொழும்பு, ஜூலை 25


நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, மஹிந்த ராஜபக்சவின் மகனும், முன்னாள் அமைச்சருமான நாமல் ராஜபக்ச வீட்டில் விருந்து வைத்துக் கொண்டாடினார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பில் 134 வாக்குகளைப் பெற்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவானார். அன்றைய தினம் இரவு நாமல் ராஜபக்சவின் வீட்டில் இரவு உணவுடன் பெரும் 'விருந்து' நடைபெற்றது என்று தெற்கு ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. அந்த 'விருந்தில்' 134 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர் என்றும் கூறப்படுகின்றது.

அதிகாலை 3 மணிவரை நடந்த அந்த 'விருந்தில்' அனைத்து வகை உற்சாக பானங்களும் இருந்தனவாம். அதேநேரம், ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப் பெருமவுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்த பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலத்தவும் அந்த 'விருந்தில்' கலந்துகொண்டிருந்தாராம். (எ-இ)

# ஜனாதிபதி செயலக ஆக்கிரமிப்பு பொலிஸார் விசாரணை ஆரம்பம்!

## வெடிகுண்டுகள் வைக்கப்பட்டனவா? என்றும் சோதனை




கொழும்பு, ஜூலை 25

போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டிருந்த ஜனாதிபதி செயலகத்துக்கு கடந்த 9ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை அனுமதியின்றி வருகைதந்தமை மற்றும் அத்துமீறிய பிரவேசம் போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு மத்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் டயஸின் மேற்பார்வையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் சி.சி.ரி.வி. காணொலியின் உதவியுடன் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து பொருள்களைச் சேதப்படுத்தி அங்கிருந்த பழங்கால பொருள்களைத் திருடிச் சென்ற பிரதான கும்பலை பொலிஸார் தற்போது அடையாளம் கண்டுள்ளனர். புலனாய்வு அமைப்பு மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் அவர்களைக் கைது செய்ய மேலதிக விசாரணைகள் துரிதப்படுத் தப்பட்டுள்ளன.

இதேவேளை- ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்தில் வெடிபொருள்கள் வைக்கப்பட்டுள்ளதா? என்பதைக் கண்டறிய வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பண்பாட்டு முறைப்படி காளாஞ்சி கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நடுதல் நடைபெற்று, பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி மாட்டு வண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இதன்போது கலாசார முறைப்படி பெருந் திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-20)

## எரிபொருள் வரிசையில் மற்றொரு உயிரிழப்பு

எரிபொருள் வரிசையில் காத்திருந்த சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அம்பாறை - பொத்துவில் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பொத்துவில் லகுகலையைச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திஸாநாயக்க என்பவரே உயிரிழந்துள்ளார். (ம-14-இ)

# பெற்றோல் விநியோகத்தில் ஆசிரியர்கள் புறக்கணிப்பு!

## மாந்தை, துணுக்காய் ஆசிரியர்கள் குற்றச்சாட்டு

**முல்லைத்தீவு, ஜூலை 25**
**எரிபொருள் விநியோகத்தின்போது தாம் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றோம் என்று மாந்தை மற்றும் துணுக்காய் கல்வி வலய ஆசிரியர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர். இவ்வாறான நிலை தொடர்ந்தால் பாடசாலைகளுக்குச் சென்று கற்பித்தல் நடவடிக்கையை தம்மால் முன்னெடுக்கமுடியாது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் குறித்த பகுதி ஆசிரியர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 11 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருள் பகிர்ந்தளிக்கப்பட்டு, விநியோக நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. பொதுமக்கள், அத்தியாவசியப் பணியாளர்கள் என்று பல தரப்பினருக்கும் எரிபொருள் வழங்கப்படுகின்றபோதிலும் துணுக்காய் மற்றும் மாந்தை கல்வி வலயங்களின் ஆசிரியர்கள் எரிபொருளை பெறுவதில் பெரும் சிரமப்படவேண்டியுள்ளது. திங்கட்கிழமை (இன்று) தொடக்கம் பாடசாலைகள் வழமைக்குத் திரும்புகின்றன. இதனால், ஆசிரியர்களுக்குப் பெற்றோல் கிடைப்பதை அரசாங்கமும் உரிய அதிகாரிகளும் உறுதிப்படுத்தவேண்டும். அத்துடன், மாந்தை, துணுக்காய் கல்வி வலயங்களின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள் தொலைவுப் பகுதிகளில் இருந்து வந்து கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுப்பவர்களாகவுள்ளனர். எனவே, எமது சிரமங்களைக் கருத்திற்கொண்டு பெற்றோல் சீராகக் கிடைக்க வழி ஏற்படுத்தப்படவேண்டும் -என்றனர். (ம-19)




# எரிபொருளுடன் பவுஸர் விபத்து!

கொழும்பு, ஜூலை 25
மீரிகம - தங்கொவிட்ட வீதியின் மலைப்பாதை ஊடாகப் பெற்றோலுடன் பயணித்த பவுஸர் ஒன்று நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளாகியுள்ளது என மீரிகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முத்துராஜவெலயில் இருந்து பேராதனைக்கு 33 ஆயிரம் லீற்றர் எரிபொருளைக் கொண்டு சென்ற எரிபொருள் பவுஸரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்துக்குள்ளான பவுஸரில் இருந்து சிந்திய பெற்றோலை பொதுமக்கள் கொள்கலன்களில் நிரப்பிச் செல்லும் ஒளிப்படங்களும் வெளியிடப்பட்டுள்ளன. (ச-இ)

# 6 எரிவாயுக் கப்பல்கள் விரைவில் இலங்கைக்கு

கொழும்பு, ஜூலை 25
33 ஆயிரம் மெற்றிக்தொன் எரிவாயுவை இலங்கைக்கு எடுத்துவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்தடுத்த நாள்களில் 6 கப்பல்கள் எரிவாயுவுடன் இலங்கைக்கு வரவுள்ளன என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

தற்போது நாளாந்தம் ஒரு லட்சம் எரிவாயுக் கொள்கலன்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய நுகர்வோருக்குத் தொடர்ந்து எரிவாயு வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில் இவ்வாறு 6 கப்பல்களில் எரிவாயு இறக்குமதி செய்யப்படுகின்றது என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-14-இ)



# கியூ.ஆர். குறியீடு நடைமுறை வெற்றி

நாடு முழுவதும் 20 மாவட்டங்களில் தேசிய எரிபொருள் விநியோக நடைமுறை (கியூ.ஆர். குறியீடு) வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டுள்ளது என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 25 இடங்களில் சோதனை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. எரிபொருள் கொள்வனவுக் கட்டளை வழங்குவதில் தாமதம் மற்றும் விநியோகம் காரணமாகவும் சோதனை செய்யப்பட்ட 5 மாவட்டங்களில் அடுத்த 2 நாள்களில் பரிசோதனை செய்யப்படும் என்றும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்தார். (எ-இ)

## எரிபொருள் தட்டுப்பாடு:

# அதிவேக வீதிகளின் வருமானம் வீழ்ச்சி!

கொழும்பு, ஜூலை 25
தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக அதிவேக வீதிகளின் நாளாந்த வருமானம் சுமார் 70 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவிக்கையில்;
அதிவேக வீதிகளின் நாளாந்த வருமானம் சராசரியாக 30 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக முன்பு காணப்பட்டது. தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவற்றால் நாளாந்த வருமானம் 8 மில்லியன் ரூபாவாகக் குறைவடைந்துள்ளது -என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கண்ணாடிக் கூட்டிலிருந்து...

'உங்கள் நாட்டின் ஜனாதிபதி அலுவலகங்களை – அதிகாரப் பீடங்களை – ஆர்ப்பாட்டங்கள் என்ற பெயரில் போராட்டக்காரர்கள் கைப்பற்றினால் அதை அனுமதிப்பீர்களா?' என்று இலங்கையில் உள்ள சர்வதேச இராஜதந்திரிகள் மற்றும் தூதுவர்களைப் பார்த்துக் கேள்வி எழுப்பியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற அன்றையதினம் பின்னிரவில் முப்படைகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டு, வன்செயல்கள் மற்றும் ஆயுதங்களால் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் வெளியேற்றப்பட்டனர். அரசாங்கத்தின் இந்த அராஜகங்களுக்கு சர்வதேசத்தில் இருந்து கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. சர்வதேசம் இந்த விடயத்தில் இவ்வளவுதூரம் கவனக்குவிவைச் செலுத்துவதற்கு இங்குள்ள தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளின் உடனடியானதும் வெளிப்படையானதுமான அறிக்கையிடலே முக்கியமான காரணமாக அமைந்தன. இந்தப் பின்னணியில்தான், ஜனாதிபதி செயலகத்துக்கு பல்வேறு நாடுகளையும் சேர்ந்த, இலங்கைக்கான தூதுவர்களை அழைத்து, அவர்களை ரணில் கடிந்துகொண்டதுடன், தூதுவர்களின் செயற்பாட்டில் தனக்கு இருக்கும் அதிருப்தியையும் வெளிப்படையாகவே தெரிவித்தார்.

ரணிலின் கருத்தையும் முற்றுமுழுதாகப் புறமொதுக்கிவிட முடியாது. அவரின் கோபத்தில் நியாயம் இருக்கவே செய்கின்றது. ஒரு நாட்டின் ஜனாதிபதி அலுவலகத்தையோ அல்லது அதிகாரப்பீடங்களையோ ஆர்ப்பாட்டங்கள் என்ற பெயரில் கைப்பற்றுவதை அனுமதிக்கக்கூடாதுதான். காரணம், அவை உச்சப்பாதுகாப்பும் இரகசியத் தன்மையும் வாய்ந்த இடங்கள். அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையையோ அல்லது ரஷ்ய ஜனாதிபதியின் கிரம்ளினையோ ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றினால் அந்தச் செயற்பாடு உலகம் ஸ்தம்பித்துப்போனமைக்கு ஒப்பானதாகவே கருதப்படும். அந்த வகையில் ஜனாதிபதி அலுவலகத்தைக் கைப்பற்றியமை, அங்குள்ள இரகசிய அறைகள் மற்றும் வழித்தடங்களை பொதுவெளியில் அம்பலப்படுத்தியமை என்பன பாரதூரமான குற்றங்கள்தான்.

ஆனால், இவ்வளவு நேர்மையாகவும் திடமாகவும் தூதுவர்களைப் பார்த்து இந்தக் கேள்வியை எழுப்பியுள்ள ஜனாதிபதி ரணில், தன் தரப்பு அபத்தத்தையும், அதில் தூதுவர்களின் அதிருப்தியையும், பொதுமக்களின் ஆவேசத்துக்கான காரணத்தையும் புரிந்துகொள்ளவேண்டும்.

அமெரிக்காவினதோ அல்லது மேற்கத்தேய நாடுகளினதோ அதிகாரபீடங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றினால் அது பாரதூரமான விடயம்தான். ஆனால், தேர்தலில் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்டு மக்களால் அரசியலில் இருந்து முற்றாக வெளியேற்றப்பட்ட ஒருவர் , 'தேசியப் பட்டியல்' என்னும் 'பின்கதவு' வழியாக நாடாளுமன்றத்துக்கு நுழைவதை அவமானத்தின் சின்னமாகத்தான் அமெரிக்காவோ அல்லது மேற்கத்தேய நாடுகளோ கருதும். அவ்வாறு மக்களால் வழித்துத்துடைக்கப்பட்டு முற்றாக வெளியேற்றப்பட்ட ஒருவர் ஜனாதிபதியாக வருவதற்கு எந்த ஜனநாயக நாடுகளும் 'இராஜதந்திரம்' என்று பெயரிடாது. அப்படியொரு நிலை ஏற்பட்டால் அமெரிக்கர்களோ, ரஷ்யர்களோ அல்லது மேற்கத்தேயர்களோ இலங்கையர்களை விடவும் மோசமான வகையில் எதிர்வினை ஆற்றலாம். ஏனெனில் அங்கு மீறப்பட்டது மக்களின் ஆணை. அரங்கேற்றப்பட்டது ஜனநாயக விரோதச் செயல்.


ரணிலைப் பார்த்து தூதுவர்கள் சிரித்தபடியே ஒரேயொரு விடயத்தை வலியுறுத்தியிருக்கவேண்டும். 'எங்கள் நாட்டில் மக்களால் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்டவர்கள் ஜனாதிபதியாக வருவதற்கு இடமில்லை. மக்களின் ஆணை இல்லாதவர்கள் மக்களை ஆட்சிசெய்ய எம் தேசங்கள் அனுமதிக்காது' என்று நெற்றிப்பொட்டில் அடித்தாற்போல் பதிலடி கொடுத்திருக்கவேண்டும். இலங்கையர்களின் மொழி ரணிலுக்குப் புரியாத பட்சத்தில், வெளிநாட்டுத் தூதுவர்கள் அதை மொழிமாற்றம் செய்வதில் தவறில்லை.

'கண்ணாடிக் கூட்டுக்குள் இருந்து கல்லெறியக்கூடாது' என்று முதுமொழியொன்று தமிழில் வழக்கில் உள்ளது. திரும்ப எறிந்துவிட்டால் கண்ணாடிக்கூடு சல்லடையாக நொருங்கிவிடும். ரணிலின் நிலையும் அதுதான். அதனை அவர் உணராதிருப்பதுதான் ஆகப்பெரிய பரிதாபம்.

நாளொரு நல்வார்த்தை

“ஒரு முள் குத்திய அனுபவம் காடளவு எச்சரிக்கைக்கு சமம்”

- திருவோயாஸ்



# காலிமுகத்திடல் தாக்குதல்: நாடாளுமன்றத்தில் விவாதம்

**கொழும்பு, ஜூலை 25**

**காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டும் என்றும், இன்று இதற்காக நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டும் என்றும் பிரதம எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.**

கட்சியின் பிரதான ஒருங்கிணைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்குக் கடிதம் மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் இது தொடர்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

காலிமுகத்திடலில் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட அடக்குமுறை மற்றும் தாக்குதல் நடத்தப்பட்ட விதம் ஜனநாயகத்துக்குக் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதைப் பலரும் வன்மையாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். காலிமுகத்திடல் மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் குறித்து விவாதம் நடத்துவதற்காக நாளையதினம் திங்கட்கிழமை (இன்று) நாடாளுமன்றத்தைக் கூட்டுங்கள். காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள்மீது பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்ட கடுமையான தாக்குதல் தொடர்பில் சர்வதேச சமூகம் கண்டனங்களைத் தெரிவித்துள்ளது. இது இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை மேலும் உக்கிரமடையச் செய்யும். எனவே இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது - என்றுள்ளது. (ம)

# நாணய நிதியக் கடனுதவி: சீனக் கடன்களால் சிக்கல்

இலங்கையில் புதிதாகப் பதவியேற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தும்போது சீனாவிடம் இருந்து பெற்ற கடன்கள் சவாலாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவிடமிருந்து இலங்கை பெற்றுள்ள கடன்கள் தொடர்பில் உரிய தரவுகள் இல்லாதபடியால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ தகவலின்படி கடந்த வருடம் இலங்கையின் வெளிநாட்டுக் கடனான 31.5 பில்லியன் டொலரில் 10 வீதமானவை சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத்தவிர சீனாவின் நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட கடன்களும் அதிகமாகவுள்ளன. கடந்த வருட இறுதிவரை இவை இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன்களில் 20 வீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. (ம)

26.07.2022 செவ்வாய்க்கிழமை ஆடி 10

சுபநேரம் : 10.32 - 12.02

ராகுகாலம்: 03.02 - 04.32

புனித அன்னாள் திருநாள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






















# எரிபொருளும் கழிவகற்றலும்

## சுகாதார நெருக்கடியிலிருந்து விடுபட்டு செயற்படுவோம்!

■ நந்தன்



நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டால் அத்தியாவசிய பணிகள் யாவும் முழுமையாக முடங்கியுள்ளன. குறிப்பாக கழிவகற்றும் பணிகள் யாவும் முற்றுமுழுதாகவே பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு நகரத்தின் சுகாதாரமானதும், சீரானதுமான செயற்பாட்டுக்குக் கழிவகற்றல் முகாமைத்துவம் தவிர்க்க முடியாதது. தற்போது அந்தத் துறை முடங்கிப்போயுள்ளதால் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்கவேண்டிய நிலைக்கு வடக்கு மாகாண மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். குறுகியகால மற்றும் நீண்டகால துன்பங்களை இந்த நிலைமையால் அவர்கள் அனுபவிக்கவேண்டியவர்களாக உள்ளனர். யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் மாநகர சபை, பிரதேசசபை, நகரசபை என்பன தமது பகுதியிலுள்ள கழிவுகளை நாளாந்தம் அகற்றிவந்தன. தற்போது டீசல் இல்லாமையால் சபைகளின் கழிகவற்றும் வாகனங்களைக் கொண்டு கழிவகற்ற முடியாது பெரும் சிரமப்படும் நிலைக்கு அவை தள்ளப்பட்டுள்ளன. யாழ். மாநகராட்சி மன்றம் கடும் முயற்சியின் விளைவாக மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கழிவகற்றி வருகின்றது.

### டீசல் வழங்கலில் முன்னுரிமை

பெற்றோல் மற்றும் டீசல் என்பன தற்போது ஓரளவுக்கு வரத் தொடங்கியிருக்கின்றன. அத்தியாவசியப் பணிக்கு முதலில் முன்னுரிமை என்ற அடிப்படையில் அவற்றை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும். அத்தியாவசிய சேவைகளில் ஒன்றான இந்தக் கழிவகற்றும் பணியை முன்கொண்டு செல்வதற்கு எரிபொருளை சிரமம் இன்றி விநியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளவேண்டும் என்பதே பொதுமக்களின் ஏகோபித்த கோரிக்கையாகவுள்ளது. அடுத்துவரும் நாள்களில் மழை பெய்யவும் வாய்ப்புள்ளன. மழைகாலம் தொடங்குவதற்கு முன்னர் தேங்கிய கழிவுகள் அகற்றப்படவேண்டும். கழிவுகள் அகற்றப்படாத நிலையில் மழை வந்துவிட்டால் நிலைமை பாரதூரமாகிவிடும். சுகாதாரச் சீர்கேடு பூதாகரமாகிவிடும். இதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

### டெங்கு பரவல்

கழிவுகள் முறைப்படி அகற்றப்படாமல் தேங்கியிருப்பதால் டெங்குத் தொற்று தீவிரமாகக்கூடிய வாய்ப்பு அதிகமுள்ளது. “இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 43 ஆயிரம் பேர் நாடளாவிய ரீதியில் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர்” என்று தெரிவித்துள்ளார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம். கழிவகற்றல் முகாமைத்துவத்தில் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட பின்னடைவும் இதற்கு முக்கியமான காரணமாக இருக்கும் என்பதை புறமொதுக்கிவிடமுடியாது. ஆதலால் பொதுமக்கள் தம்மைத் தாமே தற்காத்துக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் கழிவகற்றலிலும் பொதுமக்கள் பொறுப்புடன் இருக்கவேண்டிய காலமிது. உள்ளூராட்சி மன்றங்களும் கிடைக்கும் சிறு வாய்ப்புக்களையும் பயன்படுத்தி கழிவகற்றலை ஒளவேனும் மேற்கொண்டு சுகாதார நெருக்கடிகளில் இருந்து பொதுமக்கள் விடுபட்டு வாழ்வதற்கு வழிவகைகளை மேற்கொள்ளவேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிறுகிறது கொரோனா

## நேற்றுமுன்தினம் மட்டும் 72 பேருக்குத் தொற்று!

கொழும்பு, ஜூலை 25

நாட்டில் கொரோனாத் தொற்று மீண்டும் தீவிரமாகிவரும் நிலையில் நேற்றுமுன்தினம் மாத்திரம் 72 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களில் வெளிநாடு சென்று திரும்பியோர் எவரும் இல்லை என்பதுடன் பெரும்பாலானவர்கள் தடுப்பூசிகள் பெற்றுக்கொண்டவர்களே ஆவர். பொது இடங்களில் பாதுகாப்பற்ற முறையில் நடமாடுவதன் ஊடாகவே கொரோனா மீண்டும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என சுகாதாரத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-14,இ)

## போதையில் தாக்குதல் ஊழியருக்குக் காயம்

சாவகச்சேரி, ஜூலை 25

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு மதுபோதையில் வந்த ஒருவர், பாதுகாப்பு உத்தியோகத்தரைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார்.

குறித்த நபர் மதுபோதையில் மருத்துவமனைக்குச் சென்று, உறவினரைப் பார்வையிட விடுமாறு பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கோரியுள்ளார். சிறிது நேரம் பொறுத்திருங்கள் 5 மணிக்கே பார்வையாளர் நேரம் எனப் பாதுகாப்பு உத்தியோகத்தர் தெரிவித்த நிலையிலேயே குறித்த நபர் பாதுகாப்பு அலுவலரைத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 10 . 1953



மறைவு
21 . 07 . 2022

## திருமதி பாலகிருஸ்ணன் பரஞ்சோதி

யாழ். அல்வாய் கிழக்கு பெரியார்பகுதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொச்சிக்கடை கிரேஸ்கோர்டை (Grace Court) வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி பாலகிருஸ்ணன் பரஞ்சோதி கடந்த (21.07.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நடராசா - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் அவர்களின் அன்பு மனைவியும், சதீஸ்குமார், சாந்தகுமார், சத்தியா, சந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வடிவாம்பிகை, கம்சா, சதாசீலன், ஜசிந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பார்வதி மற்றும் இராமச்சந்திரன் கோபாலசண்முகம், ஆகியோரின் அன்புச் சகோதரியும், டிலக்சன் (Dilukshan), துசன், கோபிசா, ஷப்னா, கர்சனா, வர்சயா, கோபினா, ருத்வின் ஆகியோரின் அன்புப்பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (25.07.2022) திங்கட்கிழமை கொழும்பு பொரளையில் அமைந்துள்ள ஜெயரட்ண மலர்ச்சாலையில் மு.ப 09.00 மணி முதல் பி.ப 04.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (26.07.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரது பிறந்த ஊரான அல்வாயில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப 01.00 மணியளவில் சுப்பர் மடம் மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சாந்தகுமார் - மகன்
Grace Court,
6/4 79/1, Jempettah Lane, Colombo - 13.
Mobile: +947 776 86759

தகவல்:
குடும்பத்தினர்

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்
18 ● 10 ● 1944



அரன் அடியில்
26 ● 06 ● 2022

## அமரர் செல்வி. விசாகரத்தினம் சின்னத்துரை
### (இளைப்பாறிய உதவித் திட்டமிடல் பணிப்பாளர்)

சொல்லாலும் செயலாலும் தூய்மையாய் வாழ்ந்து
எங்கள் வாழ்வு வளம்பெற நல்வழி காட்டியவரே.
அன்புள்ளம் கொண்ட சகோதரியாக எம் கனவிலும், நனவிலும்
செயலிலும் நிற்கும் தெய்வமே
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஒரு மாத காலம் ஒரு யுகமாகக் கழிந்ததுவே
என்றென்றும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டகலாது.

கடந்த 26.06.2022 இயற்கை எய்திய எம் அன்புச் சகோதரியின் மறைவுச் செய்தி கேட்டு எமக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி, இணையம் மூலம் ஆறுதல் செய்தி கூறியவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் எம் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 26.07.2022 செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் அன்றைய தினம் முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது ஊரிக்காடு இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெற்கொழு வீதி,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

குடும்பத்தவர்
076 469 8643

# தென்மராட்சியில் மேலும் இருவருக்கு கொரோனா



சாவகச்சேரி, ஜூலை 25

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் இரு பெண்களுக்குக் கொரோனாத் தொற்று கடந்த வெள்ளிக்கிழமை உறுதிசெய்யப்பட்டது.

குறித்த இரு பெண்களும் வெளிநாடு செல்வதற்காக சாவகச்சேரியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்டபோது கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து இருவரும் சாவகச்சேரி மருத்துவமனைக் கொரோனா சிகிச்சை அலகில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-14,9)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இன்று திங்கட் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ கு.சேவற் கொடியோன் குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளது. (ம-14)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
24.03.1934

மறைவு
27.06.2022

கடந்த (27.06.2022) திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்தளங்கள் குடும்பத்தலைவர்
கொட்டைக்காட்டை பிறப்பிடமாகவும், மூளாயை
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் கந்தசாமி கணேசராசா

(சிறைச்சாலை உதவி அத்தியட்சகர்,சமாதான நீதவான்,
அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்)


அவர்களின் அந்தியேட்டிகிரியைகள் இன்று (25.07.2022) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் திருவடி நிலை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளைமறுதினம் (27.07.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட
அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்
தயாபரன் (மகன் - 077 175 1326)
சிறீதரன் (மகன் - + 1585 507 3993)
தண்ணித்தொட்டி சந்தியடி, மூளாய், சுழிபுரம்.

# நன்றி நவிலலும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்
27 . 03 . 1940



மறைவு
25 . 06 . 2022

## திரு. விஸ்வலிங்கம் சபாரத்தினம்

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்து கடந்த யூன் மாதம் 25ம் திகதி காலமான திரு. விஸ்வலிங்கம் சபாரத்தினம் அவர்களின் மரணச் செய்திகேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறிய உறவினர்கள், நண்பர்களுக்கும் பின்பு யூன் 30ம் திகதி நடைபெற்ற இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அவரது குடும்பத்தினர் தங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். அன்னாரது அந்தியேட்டி கிரியைகள் ஜீலை மாதம் 25ம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு கொழும்பு முகத்துவாரம் அந்தியேட்டி மடத்திலும் பின்பு சபிண்டீகரணக் கிரியைகள் அவரின் இல்லத்திலும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதிய போசனமும் இடம்பெறும். இந்நிகழ்வுகளில் தாங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வன்னியசிங்கம் ராஜ்குமார் (தாடிமாமா)



யாழ். மயிலியதனை கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும், பாலிநகர் வவுனிக் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வன்னியசிங்கம் ராஜ்குமார் (தாடிமாமா) கடந்த (22.07.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னியசிங்கம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், ராகினி அவர்களின் அன்புக் கணவரும், கந்தையா - மனோன்மணி தம்பதியரின் மருமகனும், பாக்கியம், பூபாலசிங்கம், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், ரதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரஸ்வதி, காலஞ்சென்ற புனிதவதி மற்றும் நடேஸ்வரி, காலஞ்சென்ற அரியரட்ணம் மற்றும் சுகுமார், காலஞ்சென்ற வர்களான விஜயகுமார், கமலேஸ்வரி மற்றும் பத்மினி, சக்திவேல், யாழினி, நளாயினி, குமுதினி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நந்தினி (லண்டன்), யாதவன் (லண்டன்), ஆதவன் (கனடா), நிரஞ்சினி (அவுஸ்ரேலியா), பகீரதன் (லண்டன்), சிந்துஜன் (மாந்தை கிழக்கு - உப தவிசாளர்), மதுஷாயினி, காலஞ்சென்ற மதிஷாயினி மற்றும் யதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாகரன், மரியா, சுஜி, சீலன், வினோதினி, ஜனா, நிமல், வைஸ்ணவி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரூசா, உமாஜெனாத், உமாஜேந், மானுஷா, ஸ்ரேயா, ஷான், சகாரா, ஷாக், சானு, றோசி, ஓவியா, பிரித்வின், அபினாஸ், ஹரிஸ், நிதின். பிரணித், பிரித்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2022) திங்கட்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 1 ஆம் யூனிற் மல்லாவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலிநகர்,
வவுனிக்குளம்,
076 673 4406 / 077 353 5918

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(Cr. 36802) (2.6)

## பேருந்துச்...

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர் கொண்டுள்ளனர்.

தனியார் பேருந்துகளுக்கு இ.போ.ச. சாலைகளில் எரிபொருள் வழங்க மறுத்துள்ளதாகவும் இதனால் சிரமத்தை தாம் எதிர்கொண்டுள்ளதால் சேவையில் ஈடுபட முடியாமல் இருப்பதாகத் தெரிவித்த தனியார் பேருந்து உரிமையாளர் சங்க இணையத்தலைவர் பொ.கெங்காதரன், அடிக்கடி இந்தப் பிரச்சினை தமக்கு ஏற்படுவதாகவும், இதற்கு உரிய நடவடிக்கை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்கவேண்டுமென தெரிவித்தார்.

இன்று யாழ்ப்பாணம் மாவட்ட தனியார் பேருந்துகள் உள்ளூர் மற்றும் வெளியூர் சேவைகளில் ஈடுபடாது எனத் தெரிவித்தார். தமக்காக தனியான இடத்தை ஒதுக்கி எரிபொருளை பெறுவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், அதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலேயே சேவையை ஆரம்பிக்க முடியும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட இ.போ.ச. பேருந்தின் சாரதி மற்றும் காப்பாளர் இருவரும் இ.போ.ச. கல்கமுவ சாலை ஊழியர்களால் தலாதகம எனும் பகுதியில் வைத்து தாக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலைக் கண்டித்தும், தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்ய வலியுறுத்தியும் இ.போ.சபையின் யாழ். சாலை ஊழியர்கள் நேற்றிலிருந்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். சம்பவம் நடந்து 3 நாள்களாகியும் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்காததால் பணிப்புறக்கணிப்பு தொடரும் என அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்டச் செயலரை, தொடர்புகொண்டு கேட்ட போது, எம்மாலான முழு முயற்சிகளையும் எடுத்துள்ளோம். இரு தரப்பினரிடமும் நாம் பேசியுள்ளோம். அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றும் வரை இந்த புறக்கணிப்பை கைவிடப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்கள். பொதுமக்களின் நன்மை கருதி இன்று சேவைகள் இடம்பெற முழு முயற்சியை மேற்கொண்டுள்ளோம் - என்றார். (அ-ஒ-7)

## வீட்டுக்குள்...

டுள்ளன.

இதுகுறித்து அவர்கள் உடனடியாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். கேப்பாபிலவு பகுதியிலுள்ள மேற்படி வீட்டின் சமையல் அறையினுள், பாத்திரத்தினுள் மர்மப்பொதி ஒன்று காணப்பட்டுள்ளது. அது உணவுப் பொதியாக இருக்கலாம் என நினைத்து வீட்டார் திறந்து பார்த்துள்ளனர். ஆனால், அந்தப் பொதியின் உள்ளே புத்தம் புதிய ரவைக்கூடுகள் காணப்பட்டுள்ளன.

அதனை வீட்டினுள் கொண்டு வந்து யார் வைத்தார்கள் என்று தெரியாத நிலையில், அச்சம் காரணமாக பொலிஸ் நிலையத்தில் வீட்டார் முறைப்பாடு செய்துள்ளனர்.

கேப்பாப்பிலவு பகுதியில் இவர்களது வீடு இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதனை விடுவிக்குமாறு இவர்கள் பல்வேறு தடவைகள் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. (அ-ஒ-19)

## கோத்தாபயவை...

ஜெனிவா உடன்படிக்கைகளின் பாரதூரமான மீறல்களில் ஈடுபட்டார் என்றும், அவை சர்வதேச சட்ட அதிகார வரம்பின் கீழ் சிங்கப்பூரில் உள்ளூரிலேயே விசாரணைக்கு உட்படுத்தத் தகுந்த குற்றங்கள் என்றும் 63 பக்கங்களைக் கொண்ட அந்தக்குற்றவியல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவி விலகவேண்டுமென வலியுறுத்தி பல மாதங்களாக நடந்த ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து கடந்த 14ஆம் திகதி கோத்தாபய சிங்கப்பூருக்குத் தப்பியோடியுள்ளார். இந்த நிலையிலேயே அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கோரி முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'பெரும் பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கம் நிலைகுலைந்தது எனினும், கடந்த மூன்று தசாப்தங்கள் அல்லது அதற்கும் மேலாகத் தொடர்ந்து வரும் மோசமான சர்வதேச குற்றங்களுக்கான தண்டனைகளிலிருந்து கட்டமைப்பு ரீதியில் வழங்கப்பட்டுவரும் விலக்களிப்புப் போக்குடன் இது உண்மையில் தொடர்புபட்டுள்ளது' என்று உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

'வெறுமனே ஊழல், தவறான பொருளாதார முகாமைத்துவம் பற்றியது மட்டுமன்றி, பாரதூரமான, மோசமான குற்றச்செயல்களுக்கான பொறுப்புக்கூறலும் இதில் உள்ளது என்பதை இக்குற்றவியல் ஆவணம் அடையாளம் கண்டுள்ளது.'

கோத்தாபய வலிந்த தாக்குதல்களுக்குத் தலைமைதாங்குவதற்கு மேஜர் ஜெனரல்களாக தான் நியமித்த தனது இராணுவ சகாக்களுக்கு தொலைபேசி மூலம் நேரடியாக கட்டளைகளை வழங்கினார் என்பதற்கும், தலைமையகத்தில் இருந்தவாறு நேரடியான மேற்பார்வை மற்றும் ஆளில்லா வேவுவிமானக் காட்சிகள் மூலம் சண்டை நடத்தப்படுவதை பார்வையிட்டார் என்பதற்குமான விவரமான ஆதாரங்கள் இவ்வாவணத்தில் இணைக்கப்பட்டுள்ளன. நிலக்கீழ்பதுங்கு குழிகளில் காப்பெடுத்திருந்த பொதுமக்கள் மீதும், உணவுக்காக வரிசைகளில் நின்றிருந்த அல்லது தற்காலிக மருந்து நிலையங்களில் மோசமாக நிலைமைகளில் நிலத்தில் படுக்கையில் முதலுதவி பெற்றுக்கொண்டிருந்த மக்கள் மீதும் வேண்டுமென்றும் தொடர்ச்சியாகவும் இராணுவம் தாக்குதல்களை மேற்கொண்டு, அவர்களை கொலை செய்தமை தொடர்பான விவரங்களும் இச்சட்ட ஆவணத்தில் உள்ளன.

2019 ஆம் ஆண்டில், சித்திரவதைக்கு உள்ளாகிய 11 பேர் கலிபோர்னியாவில் கோத்தாபயவுக்கு எதிராக பொதுவழக்கு ஒன்றைப் பதிவு செய்வதற்கு சர்வதேச சட்ட அமைப்பு நடவடிக்கை எடுத்தது. ஆனால், 2019 இல் அவர் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்ட போது இவ்வழக்குப் பின்வாங்கப்பட்டதுடன், அரசுத் தலைவர் என்ற ரீதியில் அவர் சட்ட நடவடிக்கைகளிலிருந்து விலக்களிப்புப் பெற்றார். அவர் தற்போது தன்னுடைய பதவியை இராஜினாமா செய்துள்ளமையால், அவ்விலக்களிப்பும் செல்லுபடியற்றதாகின்றது. இதுவே அவருக்கெதிரான முதலாவது குற்றவியல் முறைப்பாடாக உள்ளது என நம்பப்படுகின்றது.

உயிர்தப்பியவர்கள், மற்றும் இராணுவத்திலுள்ளவர்கள் ஆகியவர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள் மட்டுமன்றி, போரின் முடிவில் படைவீரர்களால் எடுக்கப்பட்ட தமிழ்ப் பெண்களுடைய பாலியல் அவயவங்கள் சிதைக்கப்பட்டுள்ள சடலங்களைக் காட்டும் பயங்கரமான புகைப்படங்களும் இவ்வாவணத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இவை, அவர்கள் கொலைசெய்யப்படுவதற்கு முன்னர் பாலியல் வன்புணர்வுகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கலாம் என்பதற்கான நியாயமான சந்தேகத்தை எழுப்புகின்றன.

சிங்கப்பூர் எதிர்க்கட்சி அரசியல்வாதியான கென்னத் ஜெயரட்ணம் கோத்தாபய ராஜபக்ச சிங்கப்பூரில் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு, குற்றச்சாட்டுச் சுமத்தப்படுவதற்காக முயற்சியை வரவேற்றுள்ளார்.

(அ-ஒ-இ)

**வேலையாள் தேவை**

**கொத்து, றைஸ் தயாரிக்கத் தெரிந்தவர்களும் உதவியாளர், சைப்ளையரும் தேவை.**

**077 50 73484**

**பெண் வேலையாள் தேவை**

யாழ்.நகரில் உள்ள கடை ஒன்றிற்கு பெண் வேலையாள் தேவை.
(18 வயதிற்கும் 30 வயதிற்கும் உட்பட்ட)

யாழ்.நகரில் உள்ள வீடொன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 40 வயதிற்கு மேற்பட்ட பெண் வேலையாள் தேவை.

**077 937 0000, 075 498 5400**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
07 . 01 . 1984



மறைவு
25 . 06 . 2022

**அமரர் சுந்தரராஜன் ராதாகிருஷ்ணா**

(காப்புறுதி ஆலோசகர் ஆயுட்காப்பீட்டு கூட்டுத்தாபனம்
சுன்னாகம் கிளை - LIC)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல அட்டகிரி முருகப்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



**பொன்னுத்துரை கணேசரட்ணம்**

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கணேசரட்ணம் அவர்கள் 21.07.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை (ஆயுள்வேத வைத்தியர்) கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-நாகபூஷணி தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் பாசமிகு கணவரும், பிரதீபன் (System Engineer, வவுனியா பல்கலைக்கழகம்), தாரணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் உடுவில்), அரவிந்தன் (உரிமையாளர், சரவணன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்), ஜெனனி (உளவளத்துணை உத்தியோகத்தர், பிரதேச செயலகம் நல்லூர்), நிலானி (விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக்கழகம்), Dr.சிந்துஜானி (வைத்தியர், யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபாசினி (ஆசிரியர், வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), நிஜினோல்ராஜ் (உரிமையாளர், ராஜ் ஜீவல்லர்ஸ்), சங்கீரணி, சுரேந்திரராஜா (நிதி உதவியாளர், பிரதேச செயலகம் கோப்பாய்), விஜிதரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், தேசிய உரச் செயலகம்), மதன் (பொறியியலாளர்,ICTA) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மதுரிகா, அஷ்மிகா, அக்ஷயன், ஹர்னிஷ், ஆதிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.07.2022 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று கல்லுண்டாய் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்றன என்பதை எல்லோருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணவரவு அதிகரிக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நம்பிக்கையுடன் நினைத்த செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். முயற்சியில் வெற்றி உண்டாகும்.

**இடபம்:** உத்தியோகத்தில் இருந்து வந்த பிரச்சினை நீங்கும். நிம்மதி உண்டாகும். விருந்தினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். இலாபம் ஏற்படும். பணவரவு உண்டு.

**மிதுனம்:** முக்கியமான செயல்களில் ஈடுபட்டுவெற்றி பெறுவீர்கள். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கடகம்:** ஆதாயம் அதிகரிக்கும். வீட்டுக்குரிய நவீன சாதனங்களை வாங்குவீர்கள். லாபம் காண்பீர்கள். எதிர்கால நலன்கருதி திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் நெருக்கடி விலகும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த செய்தி வீடு தேடி வரும். தொழிலில் வெற்றி உண்டாகும். புதிய செயல்களுக்கு முயற்சிப்பீர்கள். பேச்சில் கவனம் தேவை. எதிர்பாராத லாபம் கிடைக்கும். ஆதரவு உண்டாகும்.

**கன்னி:** குழப்பங்கள் உண்டாகி திட்டமிட்ட செயல் முடியாமற் போகும். ஒருசிலரின் செயற்பாட்டால் மன அழுத்தம் அடைவீர்கள். கவனம் தேவை. புதியமுயற்சிதள்ளிப்போகும்.

**துலாம்:** திடீர்ச் செலவு ஏற்படும். வாகனப்பயணத்தில்எச்சரிக்கை தேவை. அலைச்சல் அதிகரிக்கும். செலவுசெய்து சில வேலைகளை முடிப்பீர்கள். உடல் நிலையில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** தொழிலில் வெற்றி காண்பீர்கள். பணவரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். உங்கள் திட்டங்கள் நிறைவேறும். உத்தியோகத்தில் யோகமான நாள். உடல்நிலை சீராகும்.

**தனுசு:** நேற்றைய செயல் ஒன்று இன்று நிறைவேறும். நண்பர்கள் அறிமுகமாவார்கள். தொழிலில் திட்டமிட்ட செயல் ஒன்று வெற்றியாகும். பிள்ளைகளின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பீர்.

**மகரம்:** நேற்றுவரை இருந்த நெருக்கடியிலிருந்து மீள்வீர். புதிய பாதையில் பயணிப்பீர்கள். எதிர்பார்த்த இடங்களில் இருந்து உதவி கிடைக்கும். தடைப்பட்டிருந்த வேலைகள் முடியும்.

**கும்பம்:** எதிர்பார்க்காத செயலில் பிரச்சினை தலைதூக்கும். அமைதி தேவை. பணியிடத்தில் சங்கடம் தோன்றி மறையும். நட்புவட்டம் பெருகும். விழிப்புணர்வுடன் செயற்படுவீர்கள்.

**மீனம்:** தொழிலில் இன்று நம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். வீட்டுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். யோகமான நாள். உங்கள் திறமை வெளிப்படும்.

# கோத்தா, மஹிந்தவுக்கு தடை விதிக்கவேண்டும்

## கனேடிய அரசை வலியுறுத்தினார் அந்த நாட்டின் எம்.பி. ஹரி ஆனந்தசங்கரி



**கொழும்பு, ஜூலை 25**

**இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான கோத்தாபய ராஜபக்ச மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக கனேடிய அரசு தடைகளை விதிக்கவேண்டுமென்று அந்த நாட்டின் ஆளும் லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.**

இலங்கையின் சமகால அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் ஒட்டாவாவில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை மிகக் கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. இதற்கு அங்கு ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் பின்பற்றிவந்திருந்த தவறான கொள்கைகளே காரணமாகவுள்ளன. குறிப்பாக, போர் முடிவடைந்து 13 ஆண்டுகளாகின்றபோதும், பாதிக்கப்பட்ட தரப்பினரை மேம்படுத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. அதேநேரம், அந்தப்போரில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக் கூறப்படவில்லை. குறிப்பாக, 2008, 2009ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இலங்கையின் தமிழர்களின் தாயகப்பகுதிகளில் நடத்தப்பட்ட கொடூரங்களுக்கு இன்னமும் பொறுப்புக்கூறப்படவில்லை.

இதற்கு பொறுப்புக்கூறவேண்டிய பிரதான நபர்களாக இருப்பவர்கள் கோத்தாபய, மஹிந்த ஆகியோரே. அவர்கள் இருவரும் தற்போது ஜனாதிபதி, பிரதமர் பதவிகளில் இல்லை. கோத்தாபயவும், மஹிந்தவும் தமக்கு காணப்பட்ட குற்றவியல் வழக்கு விலக்கீட்டு சிறப்புரிமைகளை இழந்துள்ளனர். ஆகவே, அவர்கள் மீது பொறுப்புக்கூறலுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, சர்வதேச தரப்புக்கள் இந்த விடயத்தில் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

கடந்தகாலத்தில், சர்வதேச தரப்புக்கள் அவர்களை சுதந்திரமாக நடமாடுவதற்கு அளித்த வெளியை கைவிட்டு, உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அனைத்து அரசாங்கங்களிடத்திலும் கோருகின்றேன். அத்துடன், கனேடிய அரசாங்கம் கோத்தாபய, மஹிந்த ஆகிய இருவரும் நாட்டுக்குள் பிரவேசிப்பது உட்பட அனைத்துவிதமான தடைகளையும் அவர்களுக்கு எதிராக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் -என்றார். (ம)

## இடியுடன் கூடிய மழை தொடரும்

கொழும்பு, ஜூலை 25

சப்ரகமுவ மாகாணத்திலும் நுவரெலியா, கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் மழையும் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையும் பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் குறித்த பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25-40 கிலோமீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேலும் புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் அவ்வப்போது கடல் கொந்தளிப்பாகக் காணப்படும். ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும் -என்றுள்ளது. (14-இ)



## வேகக்கட்டுப்பாட்டை இழந்து கார் மோதியதில் சிறுமி சாவு!

வீட்டின் முற்றத்தில் சைக்கிளில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமி மீது, வீதியால் பயணித்த கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோதியதில், குறித்த சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்தார். மொரஹாவன, மில்லவ பொல்வத்தையைச் சேர்ந்த 7 வயதுச் சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கார், வீட்டு மதிலை உடைத்துக்கொண்டு உள்நுழைந்து சிறுமி மீது மோதியுள்ளது. விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## கோப்பாயில் கசிப்புடன் சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 25

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருவேறு பகுதிகளில், கசிப்பை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் மத்தி சூசையப்பர் ஆலயத்துக்கு அருகாமையிலும் மற்றும் உரும்பிராய் மேற்கு - உரும்பிராயிலும் மேற்படி சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களில் ஒருவரிடமிருந்து 2 ஆயிரத்து 250 மில்லி லீற்றர் கசிப்பும், மற்றொருவரிடமிருந்து 750 மில்லி லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது. (ம-125)

## அரச, தனியார் நிறுவனங்களில் டெங்கு தடுப்பு வேலைத்திட்டம்

கொழும்பு, ஜூலை 25

நாட்டின் அனைத்து அரச, தனியார் நிறுவனங்களிலும் டெங்குத் தடுப்பு வேலைத் திட்டமொன்றை இன்று முன்னெடுக்க சுகாதாரப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ஆண்டில் இதுவரை 43 ஆயிரம் அளவிலான டெங்கு நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர். அதிலும் ஜூலை மாத ஆரம்பம் தொடக்கம் 21ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் 8 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். டெங்குத் தொற்று நாளுக்குநாள் தீவிரமடைவதை அடுத்து, அனைத்து அரச, தனியார் நிறுவனங்களிலும் குறைந்தது ஒரு மணிநேர டெங்கு தடுப்பு வேலைத்திட்டத்தை இன்று முன்னெடுக்க சுகாதார சேவைகள் பணியகம் அறிவுறுத்தியுள்ளது. (ம-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி அமாவாசை

யாழ்ப்பாணம், ஜூலை 25

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை எதிர்வரும் வியாழக்கிழமை வழமைபோல நடைபெறவுள்ளன.

வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசை என்பன நடைபெற்று காலை 6.45 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் தீர்த்தவாரியும் நடைபெறும்.

காலை 8 மணி முதல் பொதுமக்கள் வில்லூன்றி புனித தீர்த்தக் கரையில் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என தர்மபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

# கஞ்சா ஹெரோயினுடன் மூவர் கைது

சுழிபுரத்தில் கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 2 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, அராலி மத்தியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-27)

# விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாயில் நடந்த விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் வடக்கைச் சேர்ந்த 42 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். மிதிவெடி அகற்றும் பணியாளர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று, வீதியால் சென்றுகொண்டிருந்த குறித்த நபரை நேற்றுமுன்தினம் மோதியதால் அவர் படுகாயமடைந்த நிலையில், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்தார்.

இதனையடுத்து, பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்துத் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் உடல் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-எ-19)

# ஆளுநர்களை மாற்ற ஜனாதிபதி தீர்மானம்?

கொழும்பு, ஜூலை 25

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாணங்களின் ஆளுநர்களை மாற்றுவதற்குத் தீர்மானித்துள்ளார் என்று தெரியவருகின்றது. இந்த ஆளுநர் மாற்றங்கள் இன்னும் சில தினங்களில் நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதுள்ள ஆளுநர்கள் ஜனாதிபதியான கோத்தாபய ராஜபக்ச பதவி வகித்த காலத்தில் நியமிக்கப்பட்டவர்களாவர். தற்போது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ள நிலையில், அவர் ஆளுநர்களை மாற்றுவதற்குத் தீர்மானித்துள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்து மாகாணங்களின் ஆளுநர்களும் மாற்றப்படுவார்கள் என்று தெரியவருகின்றது. அதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், இன்னும் சில நாள்களில் இந்த மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கொழும்பு உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன. (அ-எ-இ)

# குரங்கு அம்மைத் தொற்று இலங்கைக்கும் பரவலாம்!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 25

உலகளாவிய ரீதியில் தற்போது வேகமாகப் பரவும் குரங்கு அம்மை வைரஸ் தொற்று இலங்கையிலும் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன என்று சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத், குரங்கு அம்மை வைரஸைத் தடுப்பது தொடர்பில் சுகாதாரத் திணைக்களம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வைரஸ் பரவல் மற்றும் ஏனைய நாடுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதாரத் திணைக்களங்கள் தற்போது ஆய்வு செய்து வருகின்றன. இலங்கையில் இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி பதிவாகும் பட்சத்தில் அதற்கான நடவடிக்கைகள் மற்றும் தேவையான வசதிகளை சுகாதார அமைச்சு ஏற்கனவே தயாரித்துள்ளது என்று தெரிவித்தார்.

அதேவேளை, உலக சுகாதார அமைப்பு, 'குரங்கு அம்மை' பரவலை சர்வதேச அவசர நிலையாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

# எரிபொருள் விநியோகத்தை சீர்குலைக்கும் பொலிஸார்

## அதிகாரிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் எரிபொருள் விநியோகத்தை குழப்பும் வகையில் பொலிஸாரின் செயற்பாடுகள் அமைவதாக, பிரதேச செயலக அதிகாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஒரு சில பிரதேசங்களில் மாத்திரம் பொலிஸார் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குகின்றனர். ஏனைய பிரதேசங்களில் பொலிஸார் ஒத்துழைப்பு வழங்க மறுப்பதுடன், விநியோக நடவடிக்கையை குழப்பும் தரப்பினருடன் இணைந்து செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ள பிரதேச செயலகப் பணியாளர்களின் கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காமல், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முறைகேடாக எரிபொருள் பெறுபவர்களுக்கு ஆதரவு வழங்குவதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

அத்துடன் தமது வாகனங்களுக்கும், தமக்குத் தெரிந்தவர்களின் வாகனங்களுக்கும் அதிகளவு எரிபொருளை நிரப்பிச் செல்வதாகவும் பிரதேச செயலகப் பணியாளர்கள் கூறுகின்றனர். (ஒ-இ)

# வீட்டிலிருந்து வேலை ஒரு மாதம் நீடிப்பு

அரச ஊழியர்கள் வீட்டிலிருந்து பணிபுரியும் காலத்தை ஜூலை 24ஆம் திகதி முதல் மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்து சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் ஊழியர்களை மாத்திரம் வேலைக்குச் செல்லுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகம் நடைபெற்று வருவதால், பொதுப் போக்குவரத்தும் அடுத்த சில நாள்களுக்குள் வழமைக்கு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் அத்தியாவசிய சேவை ஊழியர்கள் வழமை [illegible] சமூகமளிக்க முடியும் என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

### சொல்வதைச்...

தன்னுடைய பதவிக் காலத்தினுள் அரசியல் தீர்வைக் காண்பேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அதேபோன்று , தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்தை கூட்டமைப்பு நம்ப வேண்டுமென்று பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் கருத்து வெளியிட்டிருந்தார். இந்தநிலையில், ரணில், தினேஷ் ஆகியோரின் கருத்து தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை கேட்டபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாயால் வாக்குறுதிகளை வழங்குவதில் ராஜபக்சக்களும் அவர்களின் கட்சியினரும் வல்லவர்கள். ஆனால், அவர்கள் வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. தேர்தல் காலங்களில் கூட சிங்கள மக்களுக்கு ராஜபக்சக்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால்தான் அவர்களுக்கு வாக்களித்த மக்களே அவர்களை விரட்டியடிக்க வீதிக்கு வந்தனர்.

ஒட்டுமொத்த நாட்டு மக்களின் எழுச்சிப் போராட்டத்தால் ஜனாதிபதி, பிரதமர் பதவிகளில் இருந்து ராஜபக்சக்கள் விலகினாலும் தற்போது அந்தப் பதவிகளுக்கு அமர்த்தப்பட்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் ராஜபக்சக்களின் கட்சியினரின் ஆதரவுடன்தான் செயற்படுகின்றார்கள்.

எனவே, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் புதிய ஜனாதிபதியும் புதிய பிரதமரும் வாயால் சொல்வதை செயலில் நிறைவேற்ற சிறிலங்கா பொதுஜன பெரமுனவினர் ஆதரவு வழங்குவார்களா என்பது கேள்விக்குறியே.

புதிய ஜனாதிபதியினதும் புதிய பிரதமரினதும் செயற்பாடுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். நாட்டின் நலன் கருதி எமது மக்களின் நலன் கருதி நல்ல கருமங்களை அவர்கள் முன்னெடுத்தால் அவற்றுக்கு நாம் பூரண ஆதரவை வழங்குவோம் - என்றார். (அ-ஒ-5-22)

### மக்கள்...

கொள்ளவேண்டும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'காலிமுகத்திடலில் அமைதி வழியில் போராடிய போராட்டக்காரர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலுக்குப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூறவேண்டும். அதைவிடுத்து அவர், போராட்டக்காரர்கள் மீது பழிசுமத்தும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதை உடன் நிறுத்த வேண்டும்.

மக்கள் பலத்தை ஆயுத பலத்தால் ஒரு போதும் அடக்கவே முடியாது. இந்த மக்கள் பலம்தான் ராஜபக்சக்களை அதியுயர் பதவிகளிலிருந்து தூக்கியெறிந்தது. இதை ரணில் விக்கிரமசிங்க புரிந்துகொள்ளவேண்டும்.

ரணிலுக்கு எதிராகக் காலிமுகத்திடலில் போராடும் மக்களுக்கு எனது முழுமையான ஆதரவு தொடர்ந்தும் இருக்கும் - என்றார். (அ-ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சி வரிசையில் டலஸ் தரப்பு அமரும்?

**கொழும்பு, ஜூலை 25**

**முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு எதிர்க்கட்சி வரிசையில் அமர்வதற்குத் தீர்மானித்துள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.**

கடந்த 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நடைபெற்றது. நாடாளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க 134 வாக்கு களைப் பெற்று புதிய ஜனாதிபதி யாகத் தெரிவு செய்யப்பட்டார். இந்த வாக்கெடுப்பின்போது டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவாக 82 வாக்குகள் கிடைத்தன. பொதுஜன பெரமுன கட்சியை சேர்ந்த முப்பது உறுப்பினர்களின் ஆதரவு டலஸ் அழகப்பெருமவுக்குக் கிடைத்தது. தற்போது டலஸ் தலைமையில் பொதுஜன பெரமுன கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே இணைந்து செயற்படுகின்றனர். அவர்களில் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கட்சியின் தவிசாளராக ஒரு முக்கியமான பதவியில் உள்ளார்.

இந்தநிலையில் எதிர்வரும் வாரங்களில் இவர்கள் எதிர்க்கட்சியின் சுயாதீன குழுவொன்றாக இயங்கத் தீர்மானித்துள்ளனர் என்றும், அதன்படி எதிர்க்கட்சி வரிசையில் அமரவுள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (ஏ-இ)

---

### இரு நாள்களேயான...

முழங்காவில் வீதியில், பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

பிரதான வீதிக்கருகேயுள்ள வீதியொன்றில் துணியொன்றில் சுற்றப்பட்டிருந்த நிலையில், சிசு கைவிடப்பட்டிருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சிசுவை மீட்டுள்ளனர்.

சிசு தற்போது கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. அந்தச் சிசு ஆரோக்கியமான நிலையில் உள்ளது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-113)

### ரணிலின்...

முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உணவுப் பற்றாக்குறை மற்றும் வாழ்க்கைச் செலவுகளின் அடிப்படையில் நிதி அமைச்சு முந்தைய மொத்த செலவின மதிப்பீடான 3.6 ட்ரில்லியன் ரூபாவை திருத்த வரைவில் 4.6 ட்ரில்லியன் ரூபாவாக மாற்றியுள்ளது. அத்துடன் இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் அனைத்துச் செலவுகள் மற்றும் வருவாய் மதிப்பீடுகள் மாற்றப்படவுள்ளன.

இதேவேளை - அரசாங்க வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் 2019 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த வரிக் கட்டமைப்பு மீள அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று பொருளாதார நிலைப்படுத்தல் குழுத் தலைவரும், திறைசேரியின் முன்னாள் செயலாளருமான ஆர்.எச்.எஸ். சமரதுங்க தெரிவித்துள்ளார்.

இடைக்கால வரவு - செலவுத் திட்டம் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகத்துக்கு நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை ஒரு குறுகிய காலத்துக்குள் ஸ்திரப்படுத்தவும், மீட்டெடுக்கவும் அடித்தளம் அமைக்கும். அத்தியாவசிய பொதுச் சேவைகளுக்கு கணிசமான நிதி வசதிகளை ஒதுக்கும் வகையில் அமையும் என நிதி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

### ஒகஸ்ட் 9...

வித்துள்ளார்.

காலிமுகத்திடல் மக்கள் போராட்டம் ஜூலை 14ஆம் திகதி வெற்றியுடன் முடிந்து விட்டதாகவும், அதன் பின்னர் அங்கு கிளர்ச்சிக்கான ஆயத்தங்களே நடைபெற்றன என்றும், அதனை அவர்களது பாணியில் அடக்கியதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அநுர, கொழும்பு - காலிமுகத்திடலில் அன்றும் போராடியவர்கள் மக்கள்தான். இன்றும் போராடுபவர்கள் அதே மக்கள்தான். இந் நிலையில், அமைதி வழியில் போராடும் மக்களைக் கிளர்ச்சியாளர்கள் என்று பொய் கூறி அவர்கள் மீது ஆயுதப் படைகளைக் கொண்டு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாக்குதல் நடத்த உத்தரவிட்டமை மாபெரும் அராஜகம் ஆகும். இது போராடும் மக்களுக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. 'ரணில் வீட்டுக்குப் போ' என்பதே மக்களின் தற்போதைய கோரிக்கை. இதற்கு மதிப்பளித்து ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியிலிருந்து உடனடியாக விலகி வீட்டுக்குச் செல்லவேண்டும். இல்லையேல் ராஜபக்சக்கள் போல் அடுத்த மாதம் (ஓகஸ்ட்) 9 ஆம் திகதி மக்களால் அவர் வீட்டுக்கு விரட்டியடிக்கப்படுவார்' - என்றார்.

மே மாதம் 9ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ச விலகியிருந்தார். ஜூன் 9ஆம் திகதி பஸில் ராஜபக்ச விலகியிருந்தார். ஜூலை 9ஆம் திகதி கொழும்பில் மக்கள் எழுச்சிப் போராட்டத்தால் ஜனாதிபதியாக இருந்த கோத்தாபய ராஜபக்ச தப்பி ஓடி கடந்த 14ஆம் திகதி பதவிவிலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-22)


## காணி விற்பனைக்கு

**யாழ் நாவற்குழியில் 78 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில்
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள். களஞ்சியசாலைகள். மண்டபங்கள். வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்
- யாழ்.பஸ்நிலையத்தில் இருந்து 4Km தூரத்தில்

பார்வை இடும் நேரம் :

காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு

076 490 5403, 076 491 2493,076 490 6029

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்துறை செல்லும் பிரதான வீதியில்**

**24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**(நிலப்பரப்பு)**

- யாழ்.நகரத்தில் இருந்து 4KM தூரத்தில் அமைந்துள்ளது.
- 18 அடிப் பாதையுடன் 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட் நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் மற்றும் அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

ஜெயம்: 077 814 7389
077 241 7589


## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 07 . 1986



இறப்பு 23 . 07 . 2022

## திருமதி ஹாசினி கோகுலவாசன்

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் லண்டன் ஒக்ஸ்பேர்ட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஹாசினி கோகுலவாசன் அவர்கள் லண்டனில் நேற்றுமுன்தினம் (23.07.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் (புங்குடுதீவு) சண்முகநாதன் - ஞானசௌந்தரி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், மகேந்திரலிங்கம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், கோகுலவாசனின் பாசமிகு மனைவியும், யஷ்வினியின் அன்புத் தாயாரும், கலாநிதி ஜயந்தினி (சிரேஷ்ட விரிவுரையாளர் - கிழக்குப் பல்கலைகழகம்), நதீஸ்வரன் (லண்டன்), பிரதீபன் (City Cycle - சாவகச்சேரி), ஹாயத்திரி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புவேந்தினி, துவாரகீசன் (அமெரிக்கா), Dr.விதுஷாயினி, துளசிதாசன், விக்னராஜன் (மலேசியா), ஹனுராதா (லண்டன்), டயானா ஆகியோரின் மைத்துனியும், லிங்காஷ்டகியின் பாசமிகு சித்தியும், ஷார்வி (லண்டன்), பீமேஷ் (லண்டன்), சகானா, தனுஷிக், அதிரன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் :
குடும்பத்தினர்

தந்தை - 076 539 9936
மாமா - 021 222 9568
சகோதரர் - 077 649 1676
296 A நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

கணவர் - 0044 8599 90600
சகோதரர் - 0044 7414 662294
383/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.